1987 ஏப்ரல் 10] [திரு. ச. இராமச்சந்திரன்]

அழைக்கப்பட வேண்டுமென்பதைப் பற்றி ஒரு விரிவான உத்தரவை, ஒரு விதியை—ஒரு ரூலை, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் வகுத்து அதை நடைமுறைப்படுத்த இருக்கிறார்கள். அது இன்று அல்லது நாளை அரசின் சார்பில் வெளியிடப்படும். அந்த ரூல் வந்ததும், ஒரு தொகுதியில் நடக்கவிருக்கும் முக்கியமான விழாக்களில், சட்டமன்ற உறுப்பினர், எம்.பி., சென்ட்ரல் மினிஸ்டர்ஸ், ஸ்டேட் மினிஸ்டர்ஸ், பிரைம் மினிஸ்டர், பிரசிடெண்ட், வைஸ்-பிரசிடெண்ட், சீப் மினிஸ்டர், மினிஸ்டர்கள், இவர்கள் எல்லாம் அழைக்கப்பட வேண்டுமென்று முறைப்படுத்தி உத்தரவு வர இருக்கிறது. அதற்குப் பிறகு எந்தவிதமான சங்கடங்களும் எழ வாய்ப்பில்லை.

5. கவன ஈர்ப்பு

(அ) சீர்காழியில் தையல் தேர்வு மையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கு. ரமணி, ஜே. ஹேமச்சந்திரன், கோ. வீரய்யன், வி. பி. சிந்தன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டுவருவார்.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சீர்காழி, செம்பனார்கோவில், பூம்புகார், கொள்ளிடம், சிதம்பரம், மயிலாடுதுறை, மணல்மேடு போன்ற இடங்களில் தையல் பயிற்சி பெற்றவர்களுக்குத் தேர்வு மையம் சீர்காழியில் இல்லாததால், மாணவ-மாணவிகளுக்கு ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தஞ்சாவூர் வருவாய் மாவட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் தையல் பாடங்களுக்கான தேர்வுகளுக்கு, தஞ்சாவூரில் இரு மையங்களும் (ஆண்களுக்கு ஒன்று; பெண்களுக்கு மற்றொன்று) அதேபோன்று கும்பகோணத்தில் இரு மையங்களும் ஆக நான்கு மையங்கள் அமைக்கப்படுகின்றன. இந்த நான்கு மையங்களிலும் சேர்ந்து 1984, 1985 மற்றும் 1986 ஆம் ஆண்டுகளில் முறையே 656, 664 மற்றும் 751 மாணவ/மாணவியர் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இம்மாவட்டத்தில் அதிக தேர்வர்கள் இல்லை என்பதால், வேறு புதிய மையம் ஏதும் இதுவரை அமைக்கப்படவில்லை. எனினும் சீர்காழி மற்றும் அதற்கருகிலுள்ள இடங்களிலிருந்து தையல் தேர்வெழுதவிருக்கும் மாணவ/மாணவியர்களுக்கு சீர்காழியில் 1987 ஆம் ஆண்டு தேர்வுக்காக ஒரு புதிய மையம் அமைப்பது குறித்து இடம், இருக்கை மற்றும் போக்குவரத்து வசதி பற்றி மயிலாடுதுறை மாவட்டக் கல்வி அலுவலரின் ஆலோசனை கேட்கப்பட்டு இதுகுறித்து அறிக்கை பெறப்பட்டவுடன் முடிவெடுக்கப்படும் என அரசுத் தேர்வுகள் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே குறிப்பிட்டிருக்கும்படியான இந்த மையங்களில் எல்லாம் பயிற்சி பெற்றுத் தேர்வு எழுத வேண்டிய மாணவ-மாணவியர்களுக்கு மிகத் தூரமாக இரண்டு மையங்களை ஏற்படுத்தி, அங்கே அவர்கள் செல்ல வேண்டியிருக்கிறது. தூரம் மட்டுமல்ல. அவர்களுக்கு ஏற்பட்டுவரும்படியான கஷ்டங்கள், தையல் இயந்திரங்களை ஒவ்வொருவரும் அவர்கள் வேலை செய்கின்ற, பயிற்சி பெறுகின்ற இடங்களிலிருந்து தேர்வு எழுதும் மையம் வரையிலும் தூக்கிச் செல்லவேண்டிய நிலையில், திரும்பவும் தேர்வு எழுதி முடிந்தவுடன் தூக்கிக்கொண்டு வர வேண்டிய நிலைமையும் இருக்கிறது. அந்த மாதிரி கஷ்டங்கள் இருக்கின்ற நிலையில், அவர்களுக்கு சமீபமாக, பக்கத்திலே இருக்கக்கூடிய வகையில் சில மையங்களை அமைத்தால் நன்றாக இருக்குமே, அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

1987 ஏப்ரல் 10]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, தஞ்சையில் இரண்டு மையங்கள், ஆணுக்கு ஒன்று, பெண்ணுக்கு ஒன்றுமாக, இரண்டு மையங்கள் இருக்கின்றன. அதேபோன்று, கும்பகோணத்தில் இரண்டு மையங்கள் தற்போது இருக்கின்றன. சீர்காழியில் ஒரு மையம் அமைக்க அரசு கருதியிருக்கிறது. அதற்கான இடம் தேடப்படுகிறது. இடம் கிடைத்தவுடன் அங்கே ஒரு மையம் அமைக்கப்படும்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, சீர்காழியில் ஒரு மையம் அமைப்பதற்கான ஆலோசனை கேட்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அது சரிபார்க்கப்பட்டு, ஒழுங்கான ஆலோசனையாக வரவில்லை என்றால், திரும்பவும் அவர்கள் அதே கஷ்டத்திற்கு ஆளாவார்கள். வேறு விதமான தேர்வு நடத்துகிறது. டைப்ரைட்டிங் எக்சாமினேஷன் என்று வருகின்றபோது, அதற்குக் குறிப்பிட்ட பள்ளிகளில் அரசாங்கமே ஏற்பாடு செய்து, டைப்ரைட்டர்களை வரவழைத்து, மாணவர்கள் அதில் பங்கேற்கிறார்கள். அந்த மாதிரி செய்வதில் என்ன தவறு? அதைச் செய்தாலே, இந்த மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் கஷ்டம் இருக்காது. அப்படிப்பட்ட முயற்சிகளைச் செய்வார்களா? சீர்காழி, மயிலாடுதுறை இந்த இரண்டிலே ஏதாவது ஒன்றில் அதை சென்ட்டரை ஏற்படுத்த முடியுமா? சீர்காழியிலே முடிய வில்லை என்றால் மயிலாடுதுறையிலாவது அந்த சென்ட்டரை ஏற்படுத்த முடியுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, அதற்குத்தான் ஏற்கனவே சொன்னேன். இடம் தேடப்படுகிறது. ஒருவேளை காலதாமதம் ஆகுமானால், மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனையை ஏற்று அரசு துரிதமாகப் பரிசீலிக்கும்.

(ஆ) பட்டு கூட்டுறவுச் சங்கங்களுக்கு கச்சாப் பொருள்கள் கிடைக்காததால் பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் மு. இராசாங்கம், கி. கிருஷ்ணமூர்த்தி, எஸ். இராசாராமன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.